TNTT070048152025

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கோவில்பட்டி

முன்னிலை: திரு.M.மணிமேகலா,M..A., M.L.,
நீதித்துறை நடுவர் எண். 2
கோவில்பட்டி.

2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை

**முதல் நிலை வழக்கு எண். 67/2025**

கோவில்பட்டிமேற்கு **காவல் நிலைய குற்ற எண்.** 169/2025

| | | |
|---|---|---|
| அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>கோவில்பட்டிமேற்கு காவல் நிலையம். | : | குற்றமுறையிடுபவர் |
| -எதிர்- | | |
| 1. கார்த்திக் -22/2026<br>த/பெ. சின்ன பாண்டி,<br>நடராஜபுரம் 5 வது தெரு,<br>கோவில்பட்டி.<br><br>2. செல்வகுமார்( எ)குமார் -26/2026<br>த/பெ. தங்கபாண்டி,<br>197, நடராஜபுரம் 5 வது தெரு,<br>கோவில்பட்டி. | : | எதிரி |

இவ்வழக்கானது 01.09.2025-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் முதல் விசாரணை வழக்கு எண். 67/2025 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கருப்பசாமி அவர்கள் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

## <u>உத்தரவு</u>

### 1. <u>அரசு தரப்பில் வழக்கின் சுருக்கம் :-</u>

இவ்வழக்கின் சாட்சி-2 சங்கரநாராயணனின் தங்கை கிருஷ்ணவேணி என்பவரின் மகள் பத்மாவதி, சங்கரநாராயணனின் வீட்டில் தங்கியிருந்து

கோவில்பட்டி NCE காலேஜில் படித்து வந்துள்ளார். 2024–ம் வருடம் இவ்வழக்கின் எதிரியான கார்த்திக் என்ற கோழி கார்த்திக் பத்மாவதியை கேலி செய்ததை, சங்கரநாராயணன் தட்டி கேட்டதால், எதிரி கார்த்திக் என்ற கோழி கார்த்திக்கும் அவனது நண்பர்கள் கார்த்திக் என்ற அட்டு கார்த்திக்கும், லட்சுமணனும் சேர்ந்து 26.02.2024 ம் தேதி இரவு சங்கரநாராயணன் வீட்டிற்கு சென்று வீட்டில் உள்ள பொருட்களை அடித்து நொறுக்கி, காளீஸ்வரியையும், சங்கரநாராயணனையும் அடித்து காயப்படுத்தி கொலை மிரட்டல் செய்தது சம்மந்தமாக கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய குற்ற எண் 121/2024 பிரிவு 448, 294(b), 323, 427,506(2) IPC & 3 of TNPPDL Act ஆக வழக்குப்பதிவு செய்யப்பட்டு எதிரிகளை கைது செய்து ஜெயிலுக்கு அனுப்பிய இந்த சம்பவத்தை மனதில் வைத்து கொண்டு அன்று முதல் எதிரி கார்த்திக் என்ற கோழி கார்த்திக் மற்றும் அவரது நண்பர்கள் சாட்சி –1 காளீஸ்வரி மற்றும் சாட்சி –2 " சங்கரராயணன் மீது தீராபகையுடன் இருந்து வந்துள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக 10.03.2025 ம் தேதி 23.50 மணிக்கு, சாட்சி –1 காளீஸ்வரியும் சாட்சி –3 சிவக்குமாரும் நடராஜபுரம் 5–வது தெருவுக்குள் செல்லும் முக்கில் எரியும் தெரு விளக்கு வெளிச்சத்தில் நின்று கொண்டிருந்த போது, அங்கு சாட்சி –2 சங்கரநாராயணன் அவருக்கு சொந்தமான TN 69 D 1255 என்ற பதிவு எண் கொண்ட மகிந்திரா வேனை வடக்கிலிருந்து தெற்காக ஓட்டி கொண்டு வந்துள்ளார். அப்போது எதிரி கார்த்திக் என்ற கோழி கார்த்திக இளஞ்சிறார்கள் முனியசாமி என்ற வேலு, ராமர், லட்சுமணன், எதிரி செல்வக்குமார் என்ற குமார் ஆகிய ஐந்து பேரும் சட்டவிரோதமாக ஒன்று சேர்ந்து வந்தும், எதிரி கார்த்திக் என்ற கோழி கார்த்திக் சட்டவிரோதமாக கையில் மரணத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதமான அருவாளுடனும் வந்து, எதிரிகள் மற்றும் இளஞ்சிறார்கள் அனைவரும் சேர்ந்து சாட்சி –2 சங்கரநாராயணனை கொலை செய்ய வேண்டும் என்ற ஒரே உட்கருத்துடன் சாட்சி –2 சங்கரநாராயணன் ஓட்டி வந்த வேனை வழிமறித்து, ஐந்து பேரும் சேர்ந்து சாட்சி –2 சங்கரநாராயணனை பார்த்து புண்ட மவனே, கூதி மவனே, தேவடியா மவனே என ஆளாளுக்கு அசிங்கமாக பேசி அவமானப்படுத்தியும், எதிரி கார்த்திக் என்ற கோழி கார்த்திக் சாட்சி –2 சங்கரநாராயணனிடம் எங்க மேல போலீஸ்ல கேச கொடுத்து, எங்கள ஜெயிலுக்கு அனுப்பினதானே உன் கொல்லாம விடமாட்டோம் என்றதும் சாட்சி –2 சங்கரநாராயணன் பயந்து போய் வேனிலிருந்து இறங்கியதும், எதிரி கோழி கார்த்திக் சாட்சி 2 சங்கரநாராயணனை பார்த்து இதோட செத்து தொலை நீ உயிரோடு இருக்க கூடாது என்று கூறிக்கொண்டே, எதிரி கார்த்திக என்ற கோழிகார்த்திக கையில் வைத்திருந்த அருவாளால் சாட்சி –2 சங்கரநாராயணனின் கழுத்தில் வெட்டி கொலை முயற்சி செய்தும், அந்த வெட்டை சாட்சி –2 சங்கரநாராயணன்

அவரது வலது கையால் தடுத்ததில் அவரது வலது கை மோதிர விரல் துண்டாகி கொடுங்காயம் ஏற்படுத்தியும், மறுபடியும் எதிரி கார்த்திக் என்ற கோழி கார்த்திக் அருவாளால் சாட்சி –2 சங்கரநாராயணனின் கழுத்தை நோக்கி வெட்டி கொலை முயற்சி செய்தும், அதை சாட்சி –2 சங்கரநாராயணன இடது கையால் தடுத்ததில், சாட்சி –2 சங்கரநாராயணனின் இடது மணிகட்டின் அருகில் சாதாரண காயம் ஏற்படுத்தியும், இளஞ்சிறார் முனியசாமி என்ற வேலு, எதிரி கோழி கார்த்திக் கையில் வைத்திருந்த அருவாளை வாங்கி, சாட்சி –2 சங்கரநாராயணனை பார்த்து சாவுல கூதி மவனே என்று சொல்லி சாட்சி –2 சங்கரநாராயணனின் தலை, வலது கை, நாடி ஆகிய இடங்களில் மாறிமாறி வெட்டி கொலை முயற்சி செய்து சங்கரநாராயணனுக்கு தலையின நடுவிலும், தலையின் வலது பக்கமும், வலது கை உள்புறமும், நாடியின் அடியிலும், வலது கை பெருவிரலும் சாதாரண காயங்கள் ஏற்படுத்தியும், இளஞ்சிறார் ராமர் கீழே கிடந்த ஒரு கம்பை எடுத்து வந்து, சாட்சி –2 சங்கரநாராயணனை பார்த்து சாவுல கூதி மவனே என்று சொல்லி இரண்டு தோள்பட்டையிலும் மாறிமாறி அடித்து கொலை முயற்சி செய்து சாதாரண காயம் ஏற்படுத்தியும், சாட்சி 2 சங்கரநாராயணன் கீழே விழுந்ததும் இளஞ்சிறார் லெட்சுமணனும், எதிரி செல்வக்குமார் என்ற குமாரும் சாட்சி –2 சங்கரநாராயணனை பார்த்து கூதிமவனே சாவும் என்று சொல்லி சாட்சி –2 சங்கரநாராயணனின் வயிற்றிலும், நெஞ்சிலும் மிதித்து கொலை முயற்சி செய்து சாதாரண காயம் ஏற்படுத்தியும், ஐந்து பேரும் சேர்ந்து அருவாள், கம்பு மற்றும் கல்லால் சாட்சி –2 சங்கரநாராயணன் ஓட்டி வந்த TN69D1255 மகேந்திரா வேனின் முன்பக்கம் வலதுபுறம், இடதுபுறம் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி சுமார் ரூ.30,000/– சேதம் ஏற்படுத்தியும், சாட்சி –2 சங்கரநாராயணனை பார்த்து இன்னைக்கு நீ தப்பிச்சுட்ட என்னைக்கு இருந்தாலும், நாங்க உன்னை கொல்லாம விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து சாட்சிகளுக்கு உயிர் பயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக 1வது எதிரியின் மீது பிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 118(1), 118(2), 109(1), 351(3) BNS r/w 3(5) BNS and 3 of TNPPDL Act–ன் கீழும், 2 வது எதிரி மீது பிரிவுகள் 191(2), 126(2), 296(b), 115(2), 109(1), 351(3) BNS r/w 3(5) BNS and 3 of TNPPDL Act–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கோவில்பட்டிமேற்கு காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2. 1வது எதிரி இந்நீதிமன்றத்தில் பி.டி. வாரண்ட் மூலம் ஆஜராகியும், 2 வது எதிரி ஆஜரானதும் அவருக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் 230 BNSS–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தபோது எதிரிகளு க்கு எதிராக பிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 118(2), 109(1), 351(3) BNS r/w 3(5) BNS and 3 of TNPPDL Act–ன் கீழ் குற்றத்திற்கு முகாந்திரம் உள்ளதாலும், மேற்படி குற்றமானது முற்றிலும் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்ககூடிய குற்றம் என்பதாலும் இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

4. இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்த வழக்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் இந்த வழக்கை விசாரணைக்காக பிரிவு 232(a) BNSS–ன் கீழ் தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

5. இந்த வழக்கின் பதிவுக்கட்டையும் சாட்சியத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் ஆர்.பி.எண்.215/2025 இவ்வழக்கின் சொத்துகளை பிரிவு 232(c)BNSS–ன் படி துத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

6. இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்படுவது பற்றிய அறிவிப்பு மாவட்ட அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு பிரிவு 232(d) BNSS–ன் கீழ் அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிரிகள் 08.07.2026 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

7. எதிரிகள் தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உள்ளது என்று கூறினார்.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜீன் வெள்ளி 05–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MANIMEGALA Digitally signed by MANIMEGALA Date: 2026.06.05 17:00:59 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
கோவில்பட்டி.